பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 21 வெள்ளிக்கிழமை (05.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 41

# வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்கள் எதிர்கொள்ளும் அவலம் குறித்து நாடாளுமன்றில் விசேட விவாதம்

## இம்மாதம் 10ஆம் திகதி நடைபெறும்

கொழும்பு,ஜனவரி 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் அடாவடித்தனங்கள், அடக்குமுறைகள் குறித்து விசேட விவாதம் எதிர்வரும் புதன்கிழமை (10ஆம் திகதியன்று) நாடாளுமன்றத்தில் நடைபெற வுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் டபிள்யு. எம்.லொக்குபண்டார மேற்சொன்ன திகதியை நிர்ணயித்திருக்கின்றார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை மாணவர் படையினரால் கைது

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட மூன்றாம் ஆண்டு மாணவனான பி. நிருபராஜ் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணி யளவில் கொக்குவில் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலு வலகத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளதாக ஆணைக்குழுவினர் நேற்றிரவு தெரிவித்தனர். (அ-1-203)

## முல்லைத்தீவில் கிபிர் தாக்குதல்

கொழும்பு, ஜன.5

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் உள்ள புலிகளின் கடற் தளங்கள்மீது நேற் றுக்காலை7.15 மணியளவில் விமானப் படையினர் கிபிர் விமானத் தாக்குதல் களை மேற்கொண்டனர் என்று பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த விமானத் தாக்குதலில் புலிகளுக் குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அந்நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் இருந்து 3 ஆயிரம் தொன் பொருள்கள் 'றுகுணு' கப்பல் மூலம் இன்று பருத்தித்துறை வருகின்றன

### இலங்கை அரசாங்கம் தருவிக்கிறது

யாழ்ப்பாணம்,ஜன.5

- குடாநாட்டுக்கு 3 ஆயிரத்து 500 மெற் றிக் தொன் உணவுப் பொருள்களை சென்னை துறைமுகத்தில் இருந்து ஏற்றிக்கொண்டு 'றுகுணு' கப்பல் இன்று பருத்தித்துறையை வந்தடையவுள்ளது.

இலங்கை அரசின் ஏற்பாட்டில் இக் கப் பலில் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன என்றும் -

அந்தப் பொருள்கள் ப.நோ.கூ.சங்கங் கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப் படும் என்றும் - அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக சமூக சேவைகள் மற் றும் சமூக நலத்துறை அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

குடாநாட்டில் அத்தியாவசிய உணவுத் தேவைகளை கருத்திற்கொண்டு இந்தியா வில் இருந்து ஒரு தொகை உணவுப் பொருள் கள் எடுத்து வரப்படுகின்றன.

பருப்பு, மிளகாய், கடுகு, பெருஞ்சீர கம், நற்சீரகம், உப்பு, புளி, மல்லி, அவல், சக்கரை, மஞ்சள் என்பன உட்பட நானா வித உணவுப் பொருள்கள் அவற்றில் அடங்கு கின்றன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## சு.க.- ஐ.தே.க. உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் சிக்கல்!

கொழும்பு, ஜன.5

ஸ்ரீல.சு.கட்சி - ஐ.தே.கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்துவதை கண் காணித்து ஸ்ரீல.சு.கட்சி தமது பிரதிநிதியை நியமிக்காத காரணத்தால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல் படுத்துவது குறித்து கண்காணிக்க ஐ.தே. கட்சி தனது பிரதிநிதியாக முன்னாள் பிரத மரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனை

(08ஆம் பக்கம் பார்க்க)

## சம்பூர் அனல் மின் நிலையத்தின் ஆரம்பப் பணிகள் 2 வாரங்களில்!

### அமைச்சர் செனிவிரட்ண இந்தியத் தூதருடன் பேச்சு

கொழும்பு, ஜன.5

சம்பூர் அனல் மின் திட்டத்தின் ஆரம் பப் பணிகளை இன்னும் இரண்டு வாரங் களில் ஆரம்பித்து வைப்பது தொடர்பாக மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண மற்றும் இலங்கைக் கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் ஆகியோர் நேற்று சந்தித்து உரையாடியுள் ளனர்.

கொழும்பிலுள்ள அமைச்சின் அலு வலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இரு வாரங்களுக்குள் ஆரம்பக் கட் டப்பணிகளைத் தொடங்குவதற்குத் தேவை யான இரு நாட்டு ஒத்துழைப்புப் பற்றி விரி வாக ஆராயப்பட்டுள்ளது.

அதற்கமைவாக இந்தியாவில் இருந்து பொறியியலாளர் குழுவொன்றையும் ஏனைய பணியாளர் குழுவொன்றையும் இலங் கைக்கு அனுப்பிவைக்க இந்தியா ஏற்பாடு களைச் செய்து வருவதாக அலோக் பிரசாத் அமைச்சரிடம் கூறியுள்ளார்.

இலங்கையும் தமது பணியாளர்களைத் தயார்ப்படுத்தி வருவதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ண தூதுவரிடம் கூறியுள்ளார்.

திருகோணமலையை அபிவிருத்தி செய்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலும் வெலிஓயாவிலும் நேற்று கிளைமோர் தாக்குதல்கள்

### இரு படையினர் பலி; இருவர் காயம்

கொழும்பு, ஜன.5

வவுனியா மற்றும் வெலிஓயா பிரதே சங்களில் நேற்றுக்காலை இடம்பெற்ற இரு வேறு கிளைமோர் தாக்குதல் சம்ப வங்களில் இரண்டு படையினர் உயிரிழந் தனர். மேலும் இரண்டு பேர் காயமடைந் திருக்கின்றனர்.

வவுனியா பிரப்பமடுப் பகுதியில் நேற் றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இரண்டு படையினர் காயமடைந்தனர். குறிப் பிட்ட பகுதியில் வீதிச் சோதனையில் ஈடு பட்ட படையினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இரண்டு படையினரும் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

இதேவேளை, வெலி ஓயா - கல்யாண புரம் என்ற பகுதியில் அமைந்துள்ள இரா ணுவ முகாம் மீது நேற்றுக்காலை 7.45 மணி யளவில் எறிகணைத்தாக்குதல் மேற்கொள் ளப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தவறான வழிநடத்தலை சர்வதேச சமூகம் உணர வேண்டும்

### அமைச்சர் கெஹெலிய சொல்கிறார்

கொழும்பு,ஜன.5

தவறான தகவல்களை வழங்கி விடு தலைப் புலிகள், சர்வதேச சமூகத்தைப் பிழையாக வழிநடத்துகின்றார்கள். அவர் களின் தவறான வழிநடத்தலைச் சர்வதேச சமூகமும், மதத் தலைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். - இப்படித் தெரிவித் திருக்கிறார் அமைச்சரும், பாதுகாப்பு விவ காரங்கள் தொடர்பான பேச்சாளருமான கெஹெலிய ரம்புக் வெல.

மன்னாரில் சிவிலியன்களின் குடியிருப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் பதவியை மங்களவிடமிருந்து பிடுங்க முடிவு?

கொழும்பு, ஜன.5

வெளிவிவகார அமைச்சர் பதவியை மங்கள சமரவீரவிடமிருந்து பிடுங்கி, அமைச் சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் அதை ஒப்படைக்கும் எண்ணத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருக்கின்றார் என தென் னிலங்கைச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

வெளிவிவகார அமைச்சுத் தொடர்பாக ஜனாதிபதிக்கும், அமைச்சர் மங்கள சமர வீரவிற்கும் இடையிலான முறுகல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் நிலையி லேயே, வெளிவிவகார அமைச்சுப் பதவியை மங்களவிடமிருந்து பிடுங்கும் முடிவுக்கு ஜனாதிபதி வந்திருக்கிறார் எனக் கூறப்படு கின்றது.

அந்த அமைச்சுப் பதவியை நிமால் சிறி பால டி சில்வாவிடம் ஒப்படைப்பது குறித்து கடந்த செவ்வாயன்று நிமால் சிறிபால டி சில்வாவுடன் ஜனாதிபதி நேரடியாகவே பேசியிருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

வெளிவிவகார அமைச்சுக்குப் புதிய செயலாளரை நியமித்தல், வெளிவிவகார அமைச்சின் செயற்பாடுகளில் ஜனாதிபதி யின் சகோதரரும், பாதுகாப்புச் செயலாள

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மருத்துவமனையில் மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு

### காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை!

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி மருத்துவமனையில் முக் கியமான மருந்து வகைகளுக்குத் தட்டுப் பாடு நிலவுவதாக வைத்தியசாலை வட் டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

குறிப்பாக, காயமடைந்தோருக்கான மருந்துகள், கட்டுத் துணிகள் என்பன தீர்ந்து போகும் நிலை ஏற்பட்டிருப் பதால் செவ் வாய்க்கிழமை மன்னார் - படகுத்துறைக் கிராமத்தில் 'கிபிர்' விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் காயமடைந்த பொது மக்க ளுக்குச் சிகிச்சை அளிப்பதில் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என அங் குள்ள வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மருந்துத் தட்டுப்பாடு தொடர் பாகக் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் ஐ.நா. தூதரகம் ஆகியவற்றுக்கும், இலங்கை அரசுக்கும் அறிவிக்கப்பட்டு விட்டதாம். - எனினும், மருந்து வகைகள் உரிய முறை யில் அனுப்பிவைக்கப்படவில்லை என்று டாக்டர் சச்சிதானந்தன் தெரிவித்தார். (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகர சபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
### சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கான கேள்வி அறிவித்தல் - 2007

யாழ். மாநகர சபை வளாகத்தில், பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான சிற்றுண்டிச் சாலைக் கட்டடமும் தளபாடங்களும் சமையல் பாத்திரங்களும் 15.01.2007 ஆம் திகதிமுதல் 31.12.2007 வரையான காலத்திற்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

- கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 100/- ஐயும் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா 1000/- ஐயும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் கேள்விப்படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- வருடாந்தம் ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 25,000/- ஆகும்.
- கேள்விப் படிவங்கள் 10.01.2007ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரை விநியோகிக்கப்பட்டு, 12.01.2007 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- கிடைக்கப்பெறும் கேள்விகள் 12.01.2007 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும்.
- மேலதிக விவரங்களை யாழ். மாநகர சபை அலுவலகத்தில் இயங்கும் மேற்படி சங்க அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ச.குணபாலசிங்கம்,**
செயலாளர், யாழ். மா.ஊ.வி.க.கூ. சங்கம்.
04.01.2007 (சி/51772)

---

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவலைகள்



### அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் குணசீலன்

அன்னை மடியில் 18.07.1947 — இறைவன் அணைப்பில் 06.12.2006

"ஆண்டவரே நீரே என் அடைக்கலம்
உயிர்வாழ்வோர் நாட்டில் நீரே என் பங்கு"

மணியகாரர் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். — குடும்பத்தினர்.

---

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் சிரார்த்த திதியும்



சங்கத்தானை சாவகச்சேரி

### பிரம்மஸ்ரீ. தி.இலட்சுமிகாந்தம் ஐயர்

மண்ணில் 10 * 04 * 1938 — விண்ணில் 19 * 12 * 1994

திதி: 05.01.2007

"பவ என்னும் ஆண்டு தன்னில் மார்கழி அபரபக்கம் திகழ்தரு
சோமவார துதியைத்திதியில் இறைவன் திருவருள் அழைப்பையேற்று
எம்மையெல்லாம் ஏங்கவைத்து (வானம்) பெருவெளியூடே
சென்று சேர்ந்தனர் இறைபதத்தே"

உங்கள் ஆசியுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

---

எம் அன்புத் தெய்வத்தின் விண்ணக வாழ்வின்
## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் நாகமணி கணபதிப்பிள்ளை

மண்ணகம் 24 * 10 * 1926 — விண்ணகம் 06 * 12 * 2006

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா உங்கள் அன்புக்கு ஈடாகுமா
அப்பா உங்களைக் காண ஒருமுறையேனும்
இவ்வுலகில் வந்து பிறக்கமாட்டீர்களா?

எமது தெய்வத்தின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஜெகபதி இல்லம்
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (65599)

---

# மரண அறிவித்தல்கள்

## செல்வி நடராஜா ஜீவா (ரேகா)



கலட்டி, அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நடராஜா ஜீவா (ரேகா) நேற்று (04.01.2007) காலமானார்.

அன்னார் நடராஜா - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற யசோதா மற்றும் தீபா, சுசீபா, குயின்சன் ஆகியோரின் சகோதரியும் சீலன், சிறி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஜேம்ஸசனா, ஜேம்ஸ்ராஜ், இலக்சனா, ஜஸ்மினா ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஈஸ்வரானந்தன் (சித்தப்பா).

## திருமதி இந்திராணி யோகரட்ணம் (Baby)



ஞானவைரவர் கோயில் வீதி, உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இந்திராணி யோகரட்ணம் ஜேர்மனியில் 03.01.2007 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து யோகரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராஜநாயகம் (C.T.B.) - இராசலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - அமராவதி தம்பதியரின் மருமகளும் விஜிதா (ஜேர்மனி), சுஜித்தா (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தாயும் புஸ்பதாசன் (ஜேர்மனி), லோகதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற மகேந்திரராசா மற்றும் உஷா (கொலண்ட்), இராஜ்குமார் (ஆசிரியர், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு அக்காவும் இராசரத்தினம், கனகரத்தினம், லோகநாதன் (கொலண்ட்), சகிதா ஆகியோரின் மைத்துனியும் மினுஷா, மிலோஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

S.Pushpathasan
BAHNHOF - STR 10,
56427 SIERSHAHN, GERMANY.
T.P: 049262380142
"அயோத்தியா"
110, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு,
தபாற்பெட்டிச் சந்தி. (65602)

தகவல்:
இ.இராஜ்குமார்
(ஆசிரியர், யா/கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்)

---

## ... வாழ்த்துகிறோம்



2006ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த சிதம்பரநடேசன் - சௌந்தரவல்லி தம்பதியரின் புதல்வனும் யா/மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலய மாணவனுமாகிய

**செல்வன் சி. குமரேசன்**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது உயர்வுக்கு உறுதுணை புரிந்த அதிபர், ஆசிரியர்கள் யாவரையும் மன நிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பெற்றோர், அப்பம்மா, அம்மப்பா,
மாமா, மாமிமார், சித்தப்பா,
சித்தி (ஆஸ்திரேலியா),
காந்திமதி நாதன் குடும்பத்தினர்.

---


## BARATHY
சித்தன்கேணி

### இணைந்த கணிதம்
### திரு.விஜேந்திரன்
(B.sc.Dip.in.Edu.)

A/L 2007 - அலகு ரீதியான மீட்டல் PAPER
ஆரம்பம் - இன்று வெள்ளி - 4.30
A/L 2008 சனி-ஞாயிறு 3 - 4.30
நேர்கோடு - உராய்வு
A/L 2009 ஆரம்பம்: 06.01.2007
சனி 4.30



## BARATHY
சித்தன்கேணி

தரம் 5 முதல் 11 வரை
இதுவரை அனுமதி பெறாத மாணவர்களுக்கு

### மீண்டும் ஒரு புதிய பிரிவு

நாளை ஆரம்பம்: 06.01.2007 சனி
எமது தனித்துவமும் நீண்டகால கற்பித்தல் ஆளுமையும், அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

இன்றில் இருந்து உங்கள் அனுமதியை பெற்றுக்கொள்ளவும்

அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.
அதிபர், ஆசிரியர்கள்.


## வீடு, காணிகள் விற்பனை

சுதுமலை ஈசாட்டி வைரவர் கோயில் முன்பாக 2 5/6 பரப்பில் அமைந்த புதிய கல் வீடு (இணைந்த குளியலறை வசதிகளுடன்) உடன் விற்பனைக்குண்டு.

மானிப்பாய் - பொன்னாலை வீதியில் முதலாம் ஒழுங்கையில் உள்ள 4 7/8 பரப்பு, 2 1/3 பரப்புக்காணிகள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: ப.ரதீஸ்குமார்,
கல்லூரி வீதி,
மானிப்பாய்.
தொ.பே.இல.: 0777030971

## தேவை

புங்குடுதீவில் இயங்கிக்கொண்டிருக்கும் தனியார் வைத்திய நிலையத்திற்கு B.S.M.S. / DAM வைத்தியர் தேவை.
தொடர்பு: 021 222 2537, 1205 (651),
K.K.S.வீதி, யாழ்.

## தவறிவிட்டது

வேளாதோப்பு, கட்டப்பிராயைச் சேர்ந்த சந்திரகுமார் மீரா என்பவருடைய தே.அ.அ. (இல. 807714309V), விசேட அ.அ. என்பன கல்வியங்காட்டுச் சந்தையடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

## தவறிவிட்டது

றீபன் அமலதாஸ் ரஞ்சினி என்பவருடைய தே.அ.அட்டை (707371668V கோப்பாய்) கஸ்தூரியார் வீதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில்மேற்கு ஸ்ரேசன் ரோட் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 021 222 2907

## தவறிவிட்டது

பலாலி தெற்கில் வசிக்கும் க.அன்னலட்சுமி என்பவர் 02.01.2007ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடிகாமத்திற்குச் செல்லும் வழியில் கச்சாய் சந்திக்கும் கொடிகாமத்திற்குமிடையில் மணிபேகுடன் ஒரு தொகைப்பணம் தவறவிட்டுள்ளார். கண்டெடுத்தவர்கள் குறித்த அன்னலட்சுமியிடமோ அல்லது கொடிகாமம் கௌரி வியாபார நிலைய உரிமையாளரிடமோ [illegible] தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்: அமிர்தலிங்கம்.

---

## விற்பனைக்கு

L.M.L ஆங்கில இலக்கம் உடைய ஸ்கூட்டர் லான்சர் 50 கூளர் மொடல் ஆங்கில இலக்கமுடைய மொட்டார் சைக்கிள்கள், ஜப்பான் ஆண், பெண் துவிச்சக்கரவண்டிகள், அலு சேசன் பெண் நாய் கூட்டுடன், புதிய LG குளிர் சாதனபெட்டி இரண்டு கதவுகள் உடையது. வீட்டுத் தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: T.P. 5238
19, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.


A/L CHEMISTRY DAY CLASS
INORGANIC THEORY & PAPER
By: E.RANJAN
ஆரம்பம்:
06.01.2007
Sat. 6 a.m.
ஐடியல் அக்கடமி
67/5, நீராவியடி,
யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## கந்தன் செல்லத்துரை



(கந்தரோடை, சுன்னாகம்)

கந்தன் செல்லத்துரை 01.01.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரிகந்தன்-கந்தன் இளையாச்சி ஆகியோரின் அருமைப் புதல்வனும் இரத்தினவல்லியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பர்கந்தன் கந்தன்சேதுப்பிள்ளை ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நடைபெற்று 02.01.2007 செவ்வாய்க்கிழமை பிற்பகல் கந்தரோடை சங்கம்புலவு மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசிரியமணி ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன்



(இராசுப் பத்தர்)

நல்லூர் முத்திரைச்சந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன் நேற்று (04.01.2007) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பூபாலப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மருமகனும் கெங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருஷ்ணவேணி, கோகிலவாணி, சாந்தகுமார், றோகினி, ஜெயகுமார், ரவிகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் இரட்ணகுமார், முரளிதரன், திருநந்தி ஆகியோரின் அன்பு மாமனும் ஹரிதாரணி, வினோஜிதன், சிவசங்கர், கிருஷாந்தன், அனோஜிதன், மிதுசன், தனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2007) பி.ப 2 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி.

## நவரத்தினம் இராசநாயகம்



கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கேணியடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் இராசநாயம் நேற்று (04.01.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நவரத்தினம் (கோடார்க்காரர்)- தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் விஜயகுமாரியின் அன்புக் கணவரும் விஜிதா, சுஜிதா, ராஜ்குமார், ரஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2007) வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி வைத்திலிங்கம் அன்னப்பிள்ளை (கிளி)



கூழாவடி ஆனைக்கோட்டை, புக்கை தின்னி பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி வைத்திலிங்கம் அன்னப்பிள்ளை நேற்று (04.01.2007) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் மகேந்திரன், மகாராஜா, மகாதேவன், மயூரன், சுதாகரன், மகேஸ்வரன், சிவமதி, சுரேந்திரன் ஆகியோரின் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.01.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி புக்கை தின்னி பிள்ளையார்
கோயிலடி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
உறவினர்கள்.

## திருமதி குமாரசாமி கனகம்மா (பகவதி)



சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த குமாரசாமி கனகம்மா 04.01.2007 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், சந்திரசேகரன் (யா/டிறிபேக்கல்லூரி), சூரியகுமாரன் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2007) வெள்ளிக்கிழமை மு.ப.9 மணிக்கு புலுட்டையன் பிள்ளையார் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலுட்டையன் பிள்ளையார் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல்:
கு.சந்திரசேகரன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாயிரத்து 250 பட்டதாரிகளுக்கு இவ்வருடம் ஆசிரியர் நியமனம்

கொழும்பு,ஜன.5

பாடசாலைகளின் புதிய வருட முதலாம் தவணைக் காலத்திற்குள் கல்வி அமைச்சு 7,250 ஆயிரத்து ஆசிரியர்களை நியமனம் செய்யவிருப்பதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சு இவ்வாண்டை கல்வி அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருப்பதால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கமாகவே அந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் ஆசிரியர் நியமனங்களுள் 4 ஆயிரம் பேருக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனங்களும் மூவாயிரத்து 250 பேருக்கு கல்லூரி டிப்ளோமா நியமனங்களும் உள்ளடங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

பட்டதாரி ஆசிரியர் நிமனங்கள் போட்டிப் பரீட்சை நடத்தப்படாமல் பாடசாலைகளின் பெயர்கள் குறித்து விண்ணப்பம் கோரப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு விண்ணப்பம் கோரப்பட்டு வழங்கப்படும் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்ட பாடசாலையில் 5 வருடங்கள் கட்டாய சேவை செய்யவேண்டும் எனக் கேட்கப்படுவர்.

இவர்கள் அனைவரும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு மாத்திரம் நியமனம் செய்யப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## அனுமதி அட்டை கிடைக்காதோருக்கு

நாளை நடைபெறவிருக்கும் அரசாங்க முகாமைத்துவ உத்வியாளர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் யாழ்.மாவட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டைகள் கிடைக்கதாவிடத்து, நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையுடன் 0112785230 இலக்க தொலைபேசி மூலமும் அல்லது பக்ஸ் இலக்கம் 0112784232 மூலமும் தொடர்புகொண்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுரா எதிரிசிங்க அறிவித்துள்ளார். (1-11)

## வடக்கு - கிழக்கிற்கு தனித்தனியாக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

கொழும்பு,ஜன.5

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தனித்தனி மாகாணக் கல்விப் பணிப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு- கிழக்கு மாகாண உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டதை அடுத்து இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய ஆர்.விசாகலிங்கம் கிழ்க்கு மாகாணத்திற்கான கல்விப் பணிப்பாளராகவும் வடக்கு - கிழக்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய வீ.இராசையா வட மாகாணத்திற்கான கல்விப்பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக தற்போது நியமிக்கப்பட்டுள்ள ஆர்.விசாகலிங்கம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஓய்வு பெறுகிறார். அவரின் இடத்திற்கு முதுநிலை அடிப்படையில் சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளராகத் தற்போது கடமையாற்றும் எம்.ரி.ஏ.தெளபீக் நியமனம் செய்யப்படுவார் என கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த)

## ஈழத் தமிழர் மீதான வன்முறை; இந்தியா வருத்தம் தெரிவிப்பு

### கலைஞர் கருணாநிதிக்கு மன்மோகன் சிங் கடிதம்

சென்னை,ஜன5

ஈழத் தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் வன்முறையானது இந்திய அரசை மிகவும் பாதித்துள்ளது எனக் கவலை வெளியிட்டிருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் தமது வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுகளைத் தொடரவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க இந்திய மத்திய அரசு உதவ வேண்டும் எனக் கோரி தமிழக முதல்வர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்குக் கடிதமொன்றை அண்மையில் வரைந்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பிரதமர் அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

''இலங்கை இனப்பிரச்சினையைப் பேச்சுகள் மூலம்தான் தீர்க்க முடியும். அதற்கான வழிவகைகளை சம்பந்தப் பட்ட தரப்புகள் மேற்கொள்ள வேண்டும். தமிழர்களுக்கு எதிரான வன்முறை இந்திய அரசை மிகவும் பாதித்துள்ள நிலையில், மேற்கண்ட பிரச்சினையை அதிகரிக்கும் நடவடிக்கையில் நாம் ஈடுபடக் கூடாது.

வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டும். வன்முறைகளால் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி மக்கள்தான். எனவே சம்பந்தப்பட்ட தரப்பு கள் வன்முறையைக் கைவிட வேண்டும் என இந்தியா கேட்டுக் கொள்கி றது'' எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

## பாட நூல் விநியோகத்தில் பாகுபாடு; தாமதம்: தமிழர் ஆசிரியர் சங்கம் அமைச்சரிடம் புகார்

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கும், ஏனைய மாகாணங்களிலுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கும் அரசினால் வழங்கப்படும் பாடநூல் விநியோகத்தில் பாகுபாடும், தாமதமும்காட்டப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளது என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சரை சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவமும், பத்திரிகைச் செயலாளர் தி.கணேசராசாவும், இசுறுபாயாவிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின்போதே மேற்படி தாமதங்கள், குறைபாடுகள் பாகுபாடுகள் தொடர்பாக சங்கத் தூதுக்குழு சுட்டிக்காட்டி விளக்கியதோடு இதனால் தமிழ்மொழிமூல மாணவர்களுக்கு கல்வியில் சமவாய்ப்பு மறுக்கப்படுகின்றது எனவும் தெரிவித்தது.

உடனடியாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் தர்மசேனாவை அழைத்த அமைச்சர், இவ்விடயங்கள் தொடர்பாக விளக்கம் கோரியதோடு, தமிழ் மொழி மூல பாடநூல் தொடர்பாக சங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக விபரமான அறிக்கையைத் தன்னிடம் தருவதோடு, சங்கத்தின் பொதுச் செயலாளருக்கும் அனுப்பி வைக்குமாறும் பணித்துள்ளார் என சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித் தார்.

## ஞானம் காலமானார்

கொழும்பு, ஜன.5

பிரபல தொழிலதிபரும், வீரகேசரி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவருமான வை.எஸ்.ஞானம் தனது 84ஆவது வயதில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் காலமானார். சுகவீனம் காரணமாக சிகிச்சை பெற சிங்கப்பூரிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்த சமயம் அவர் காலமானார்.



தென்னிந்திய திருச்சபையின் யாழ்.மாவட்டப் பேராயர் கலாநிதி டானியல் எஸ்.தியாகராசாவுக்கு சாவகச்சேரி ஆதீனத்தினர் நடத்திய வரவேற்பு நிகழ்வில் புதிய பேராயர், முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம் : தென்மராட்சி செய்தியாளர்)*

## பாரமரிப்பு வேலைகளுக்காக சில இடங்களில் மின் தடை

யாழ்ப்பாணம்,ஜன.5

மின்விநியோகப் பாராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு மின்விநியோகம் கட்டம்கட்டமாகத் தடைப்படும் என இலங்கை மின்சாரசபையின் யாழ். அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

இந்தவகையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (202)

# யாழ். பல்கலைக்கழகச் செயற்பாடுகளை 22இல் மீள ஆரம்பிப்பதற்கு மாணவர், பெற்றோரின் ஒத்துழைப்பை பதில் துணைவேந்தர் கோருகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கல்விச் செயற்பாடுகள் தங்குதடையின்றி இடம்பெற பெற்றோர்கள், மாணவர்கள், சமூக நலன்விரும்பிகள் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

- இப்படிக் கோரியுள்ளார் யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இடையூறுகளின் மத்தியிலும் கல்வியைக் கைவிடவோ அன்றி ஒத்திவைக்கவோ எமது மாணவர்களும் பெற்றோரும் எக்காலத்திலும் இடம்கொடுக்கவில்லை.

இப்போதும் மாணவர்களதும் எமது எதிர்காலச் சந்ததியினரதும் நலன்களைக் கருத்திற்கொண்டும் மாணவர்களாலும் பெற்றோர்களாலும் சமூக நலன்விரும்பிகளாலும் விடுக்கப்பட்டு வந்த ஏகோபித்த வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டும் மதிப்பளித்தும் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்விச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படும்போது பல அசெளகரியங்களை மாணவர்களும் பெற்றோரும் எதிர்நோக்கக்கூடும். அவற்றைச் சகித்துக்கொண்டு கல்விச் செயற்பாடுகள் தங்கு தடையின்றி நடைபெற ஒத்துழைக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

பின்வரும் அடிப்படையில் மாணவர்களுக்கு இயலுமான அளவு வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### இருப்பிட ஒழுங்குகள்

ஏற்கனவே உள்ள பல்கலைக்கழக விடுதிகளுடன் சில தனியார் கட்டடங்களையும் வாடகைக்குப் பெற்று அவற்றை விடுதிகளாக மாற்றி மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் வதிவிட வசதிகள் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்:

அ) வெளி மாவட்டங்களிலிருந்து கப்பல் மூலம் அழைத்துவரப்படும் மாணவர்களுக்கு அவர்கள் இருப்பிட வசதிக்கு விண்ணப்பித்திருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படும்.

ஆ) குடாநாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தினால் இருப்பிட வசதி செய்துகொடுக்கப்படமாட்டாது. இருப்பினும் யாழ்.குடாநாட்டின் வடமராட்சி கிழக்கு, தென்மராட்சியின் இனங்காணப்பட்ட சில தூரப் பிரதேசங்கள், தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இயலுமான வரை இருப்பிட வசதி செய்து கொடுக்க முயற்சிக்கப்படும்.

இ) ஏற்கனவே குடாநாட்டில் தங்கியுள்ள வெளிமாவட்ட மாணவர்களை அவர்கள் தற்போது வதியும் இடங்களிலேயே வதியுமாறு ஆலோசனை கூறப்படுகிறது. இவர்களுக்குப் பல்கலைக்கழகத்தினால் இருப்பிட வசதி செய்துகொடுக்கப்படக் கூடிய சாத்தியமில்லை.

பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் வதிவிடங்களுக்கு வதிவிட வசதிகளுக்கு ஏற்பவாடகை நிர்ணயிக்கப்படும்.

### உணவு வழங்கல் ஒழுங்குகள்

பல்கலைக்கழகத்தால் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் வதிவிடங்களில் வசிக்கும் மாணவர்களுக்கு அவர்களது வதிவிடங்களில் அல்லது பல்கலைக்கழக மாணவர் நிலையங்கள், சிற்றுண்டிச் சாலைகளில் உணவு பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இயலுமான அளவு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

i) இவற்றை ஒழுங்குசெய்து நடைமுறைப்படுத்தும் ஆரம்ப ஒழுங்குகளை மேற்கொள்ள சகல பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. படிப்படியாக உணவு வழங்கல் தொடர்பான விடயங்கள் வெவ்வேறு வதிவிடங்களில் உள்ள மாணவர் குழுக்களாலேயே கையாளப்பட்டு நிர்வகிக்கப்படும்.

ii) பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் உள்ள வதிவிடங்களிலும் பல்கலைக்கழக மாணவர் நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகளிலும் வழங்கப்படும் உணவுகளைத் தயாரிப்பதற்கான உணவுப் பொருள்களைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்றுக்கொள்ள யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

iii) மதிய உணவு மற்றும் சிற்றுண்டி போன்றவற்றை தேவைப்படும் மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர் நிலையங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளில் பெற்றுக் கொள்ள இயலுமான வசதி செய்துகொடுக்கப்படும். இவற்றிற்கு முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். உணவுப் பார்சல்கள் வெளியே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

iv) மேற்குறிப்பிட்ட உணவு விநியோகக் குழு உணவின் தராதரம் பேணப்படுவதை உறுதிசெய்வதுடன் உணவு வகைகளுக்கு விலைகளையும் நிர்ணயிக்கும்.

### எழுதுகருவிகள், காகிதாதிகள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்கள்

ஒவ்வொரு மாணவனும் குறிப்பிட்டளவு எழுதுகருவிகள், காகிதாதிகள் மற்றும் அத்தியாவசியப் பாவனைப் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்படும். இதற்காக மாணவர் நலன் சேவைகள் பிரிவில் ஒரு விற்பனை நிலையம் இயங்கும்.

### மருத்துவ வசதிகள்

பல்கலைக்கழக மருத்துவ நிலையம் தனது வழமையான சேவைகளை வழங்கும். மருத்துவ நிலையத்திற்குத் தேவையான மருந்து வகைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வெளிமாவட்ட மாணவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வருதல்

அறிவிக்கப்படும் திகதியில் திருகோணமலை மாவட்டம் தவிர்ந்த ஏனைய வெளிமாவட்ட மாணவர்கள் வவுனியா வளாகத்திற்கு வருமாறு அழைக்கப்படுவர். அவர்கள் அங்கு தமது பெயர்களைப் பதிவுசெய்த பின்னர் அங்கிருந்து பேருந்துகளில் திருகோணமலைக்கு அழைத்துச்செல்லப்பட்டு கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவர். திருகோணமலை மாவட்ட மாணவர்கள் திருகோணமலை நகரின் குறிப்பிட்ட ஓர் இடத்திலிருந்து அழைத்துவரப் படுவர்.

### பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள்

பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக படைத்தரப்புடன் பேசப்பட்டபோது கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு படைத்தரப்பினால் இடையூறு விளைவிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SCC இன் கணனிப்பயிற்சி நெறிகள்
ஆரம்பம் 07,10.01.2007

Special Offer 3000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 3000/= கற்க, ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | 4 months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 months |
| DIPLOMA IN WEB DESIGNING | 4 months |
| DIPLOMA IN VISUAL BASIC | 4 months |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | 3 months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 months |

Softview Computer College
No.55, Arasady Rd, Jaffna, 021-2225170
scclanka@hotmail.com



## ஞானோதய அக்கடமி

சங்கத்தானை சாவகச்சேரி

A/L 2009

கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 06.01.2007 நண்பகல் 12 மணி

Tam.-இரா.அகிலன்
Geo.-மயூரன்
H.C.-ஜோதீஸ்வரன்
Hin.s.-சசிகரன்
Hist.-சுதன், பத்மன்
Drama.-ராமதாஸ்
Chri.-றெஜினோட்

Eco.-அன்ரனி
Acc.-பார்த்தீபன்
Com.-பசில்
Log.-ராமதாஸ்
Pl.sci-சந்துரு
Ag.sci.-தீபன்

(65570)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

845 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மகரம் 37 39 48 54

02-01-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4754555 - 4769578

ஜக்பொட் பரிசு ரூபா.9,295,600/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 332,586 | 10/- | 3,325,860/- |
| 2 இலக்கங்கள் | 30,545 | 20/- | 610,900/- |
| 1 இல. + லக்கினம் | 30,278 | 30/- | 908,340/- |
| 2 இல. + லக்கினம் | 2,778 | 100/- | 277,800/- |
| 3 இலக்கங்கள் | 830 | 500/- | 415,000/- |
| 3 இல. + லக்கினம் | 67 | 5,000/- | 335,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 9,295,600/- | 9,295,600/- |
| மொத்தம் | | | 15,568,500/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 397,094 | | 16,592,000/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5642774க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஜனவரி 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 4769132-9-02 |
| கொழும்பு | 4766497-3-66 |
| இரத்தினபுரி | 4761214-9-20 |
| மாத்தளை | 4766287-7-03 |
| மட்டக்களப்பு | 4767680-5-19 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் அன்னப்பிள்ளை(கண்ணு)



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் இல.261/6, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் அன்னப்பிள்ளை நேற்று (04.01.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் அமரர்களாகிய முத்துவேலு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கணவதிப்பிள்ளை, பாக்கியம், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அமரசோதி, சண்முகலிங்கம்(கனடா), காலஞ்சென்ற தவபாக்கியவதி, (ராணி), குகேந்திரன் (குகன்-றொலக்ஸ் உரிமையாளர் -கொழும்பு), புவனேஸ்வரி (நோர்வே), புஷ்பநீலா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரபவானி, இராஜலக்சுமி, கனகசபை, ஜெமிலா (லதா -கொழும்பு), யோகலிங்கம், மாணிக்கவாசகர் ஆகியோரின் பாசமிகு மாமியும் மகிந்தன்(அமெரிக்கா), ஜெகப்பிரியா, முரளிகரன், தர்ஷன், சர்மிளா, நிஷான், கலைவாணி, விஜய் (கனடா), துஷ்யந்தன்(அமெரிக்கா), ஜெயந்தா, விஷ்ணு (கொழும்பு), திகிரி, உமையாள், தனஞ்ஜெயன்(கொழும்பு), உஷா (நோர்வே), பாலசங்கரி, திமோதன், தபிதா(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று(05.01.2007)வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேரன் அ.தர்ஷன்.
261/6, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 021 222 8154


CAR விற்பனைக்குண்டு
Fort - E & cort 8ஸ்ரீ XXXX கார் விற்பனைக்குண்டு
தொடர்பு கொள்ள வேண்டிய
தொ.பே.: 0777570124



வீடு விற்பனைக்கு
இராசவீதி, கோப்பாய் தெற்கில் 6 பரப்புக் காணியில் அமைந்த சிறியவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: ரி.மூர்த்தி, இராச வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.



PERSONAL CLASSES
பிரத்தியேக வகுப்புகள்
ENGLISH MADIUM TAMIL MADIUM Maths For Grade 6,7,8,9,10 & 0/L BY: K.Para
புலமைப் பரிசில் வகுப்புகள்
விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்
O/L & 10
CLASSES COMMENCEING ON
6th Jan 2007 at 4 p.m.
K.Para, 8A, Fletches Lane,
(சுண்டுக்குழி மகளிர் கல்லூரிக்குப் பின்புறம்)
Chundikuli, T.P.: 9867



மணப்பெண்கள் தேவை
யாழ்.இந்து கௌரவ 33 வயது,B.Sc.கொழும்பில் Computer Software Engineer ஆக இருந்து லண்டனில்M.Sc.முடித்து Wark Permit இல் பணிபுரியும் மணமகனுக்கும் அவரது சகோதரரான வயது 27 இலங்கையில்Dr.BSMS ஆக இருக்கும் மணமகனுக்கும் படித்த மணப்பெண்கள் தேவை.
தொடர்பு:V.Suntharamoorthy,
சங்கத்தானை, சாவகச்சேரி.
தொ.பே.: 0777949630, 0112 725382



COMPUTER PARTS SALE
கணனி உதிரிப்பாகங்கள்,சீ.டிக்கள் கொழும்பிலிருந்து விமானம் மூலம் தருவிக்கப்பட்டுள்ளன.
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
SPEED IT NET
72/28, பணிக்கர் லேன், திருநெல்வேலி.
தொ.பே.: 4591871, 0777563213



ஞானோதய அக்கடமி
சங்கத்தானை சாவகச்சேரி
A/L 2009
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 06.01.2007 (12 மணி)
A/L 2007 Day Class
கலை, வர்த்தக வகுப்புகள்நடைபெறுகின்றன.


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை செல்வி விஜியலக்சுமியின் பாசமிகு தந்தை

### இ.அப்புத்துரை

அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
யா/ ஸ்ரீ சோமஸ் கந்தக்கல்லூரி,
புத்தூர்.

## நினைவுப் பிரார்த்தனை

எமது கல்லூரி ஆசிரியை திருமதி அன்னலட்சுமி வில்வா அவர்களின் அருமைத் தாய்

### திருமதி ஞானேஸ்வரி அருளானந்தம்

அவர்களின் பிரிவு குறித்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கனகசபை முருகேசு



அச்சுவேலி, தோப்பு அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் நாமும் துயரில் பங்கு கொள்கின்றோம்.

அச்சுவேலி
தோப்பு ஆலய பரிபாலன சபை.


புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat (SriLanka)
Foundation Leval, Intermediate Leval & Final
Exam: Jan 2006 ஆரம்பம் 06.01.2007 (saturday)
Medium: English & Tamil
வார நாள் வகுப்புகள் வார இறுதிநாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
Further Details
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.


## இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பு மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 06.01.2007 | புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு,வடமராட்சிப் பிரதேசம் |
| 13.01.2007 | கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர். |
| 20.01.2007 | உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலி பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி. |
| 27.01.2007 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 03.02.2007 | இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், பொற்பதி, சங்குவேலி, |
| 10.02.2007 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை, |
| 17.02.2007 | குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன் துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

(சி-51764)

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை

## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம் அமரர்

### வல்லிபுரம் கந்தையா (மணியம் மாஸ்ரர்)

சிற்பத்தில் கைவண்ணம் காட்டி
சிறப்பான கலைவண்ணம் கூட்டி
விற்பன்னராய் அவனியிலே திகழ்ந்தீரே
விதிதன் விளையாட்டைக் காட்டியதா?
சொற்ப வார்த்தைகளால் - எம் சோகம் சொன்னாலும்
எற்றைக்கும் தீராது உம் பிரிவின் ஏக்கம் எம்முள் தானே.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
திருமதி விஜயபாலசிங்கம் குடும்பத்தினர்
தொரண்யம், நோர்வே.

## கண்ணீர் அஞ்சலி

யா/சென்.ஜேம்ஸ் ம.வி. இசை ஆசிரியை திருமதி நிர்மலா சுகந்தநாதன் அவர்களின் அன்புக் கணவர்

### கிறிஸ்ரி சுகந்தநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இசை ஆசிரியர் கழகம்,
யாழ்.கல்வி வலயம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி பகவதி ராஜ்மோகன் அவர்களின் அன்புத் தாய்

### சாரங்கபாணி ஐயர் மகேஸ்வரி அம்மா

அவர்கள் 01.01.2007 இல் இறைபதம் எய்தினார். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட இரசாயனவியல்துறையில் தொழில்நுட்ப அலுவலராகப் பணிபுரியும் சி.சாந்தகுமார் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் தம்பிப்பிள்ளை சிவகுரு

அவர்கள் 02.01.2007 அன்று காலமானதை அறிந்து மிகவும் மனவருத்தம் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாயபீட நலன்புரிச் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.5

தீவகக் கல்வி வலய அதிபர்களுக்கான கலந்துரையால் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கேட்கப்பட்ட விவரங்களுடன் அதிபர்களைக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கேட்டுள்ளார். (202)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.5

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

## முன்பள்ளி சிறார்களின் கலை விழா

சுழிபுரம், ஜன.5

வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு வட்டு இந்துக் கல்லூரி மண்டபத்தில் சங்கத்தின் தலைவி இ.ஜீவா தலைமையில் நடைபெறவுள்ளது. (202-28)

# அரிசி, சீனி, பருப்பு போன்ற பொருள்களை விற்பனை செய்யத் தனியாருக்கு அனுமதி

### பிரதேச செயலரின் சிபார்சுடன் அவற்றைப் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.5

குடாநாட்டில் உள்ள தனியார் வியாபாரிகள் அரிசி, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்வதற்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அனுமதி வழங்கியுள்ளார்.

அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் இப்பொருள்களைவிற்பனைசெய்தற்கு, வியாபார நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள விரும்பும் வியாபாரிகளுக்கு இப்பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கையிருப்பில் உள்ள அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருள்களை பாவனையாளர்களுக்கு விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமக்குத் தேவையான அரிசி, சீனி, பருப்பு போன்ற பொருள்களை செயலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பொருள் விநியோகத்தின் போது உரிய குடும்ப அட்டைகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு குடும்பத்தின் தேவைக்கு ஏற்ப விநியோகம் செய்யப்படவேண்டும்.

இதேவேளை, குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வியாபாரங்களை மேற்கொள்ள முடியாது போயிருக்கும் தனியார் வியாபாரிகளுக்கும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருள்களை விற்பனை செய்ய, தமது வியாபார நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள விரும்பும் வியாபாரிகளுக்கும் இப்பொருள்களை விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ப.நோ.கூ.சங்கங்கள் தமது கையிருப்பில் இருக்கும் பருப்பை தனியார் வியாபாரிகளுக்கு விற்பனைக்கு வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

எனவே அரிசி, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் தேவைப்படும் வியாபாரிகள் தமது பிரதேச செயலருடன் தொடர்புகொண்டு உரிய ப.நோ.கூ.சங்கம் ஊடாக இப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றுள்ளது. (1-203)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.5

வேலணை வரலாற்று நூல் வெளியீட்டுச் சபையின் ஆதரவில் 'வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.பொ.இரத்தினத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் கா.சிவத்தம்பி கலந்து கொள்வார். (202)

## சிக்குன்குனியா மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,ஜன.5

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் சிக்குன்குனியா நோய் தடுப்பு முகாம் ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் பேருந்து நிலைய மேல்மாடியில் நடைபெறவுள்ளது.

வாரம்தோறும் சனிக்கிழமைகளில் இந்த முகாம் நடத்தப்பட்டு மருந்து விநியோகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

# சட்டக்கல்லூரிக்கு தமிழ் மாணவர் அனுமதி குறித்த மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுக்குத் தடை

### உயர் நீதிமன்றம் விதிப்பு

கொழும்பு,ஜன.5

ஏழு தமிழ் மாணவர்களுக்கு சட்டக்கல்லூரியில் இடமளிக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கின்றது.

ஏழு தமிழ் மாணவர்களின் சட்டக்கல்லூரி அனுமதி கடந்த ஆண்டில் மறுக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன், அவர்களுக்கு இவ்வாண்டு சட்டக்கல்லூரியில் அனுமதி வழங்கும்படி அண்மையில் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவுக்கு எதிராக சட்டமா அதிபர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு ஒன்று தாக்கல்செய்யப்பட்டது.

தற்போது நீதிமன்ற விடுமுறைக்காலம் என்பதால் ஒரேயொரு நீதியரசரைக் கொண்ட - விடுமுறைக்கால உயர்நீதிமன்ற அமர்வில் - இந்த மேன்முறையீட்டு மனு கடந்த திங்களன்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போதே மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுக்கு எதிர்வரும் 12ஆம் திகதிவரை இடைக்காலத்தடை உத்தரவு வழங்கினார் நீதியரசர் அன்ட்ரூ சோமவன்ஸ்.

அன்றைய தினம் மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நடைபெறும் என்றும் நீதியரசர் அறிவித்தார். (உ)

# தமிழீழ அடையாள அட்டையை வைத்திருப்பது சட்டப்படி குற்றம்

கொழும்பு,ஜன.5

விடுதலைப் புலிகளால், வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்படும் தமிழீழத் தேசிய அடையாள அட்டை வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டோருக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எச்சரித்துள்ளது.

தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் அதிகாரம், இலங்கை ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளருக்கே உண்டு. வேறு யாருக்கும் இந்த அதிகாரம் கிடையாது. அப்படி யாராவது வழங்கியிருந்தால் அவை போலியானவை. மோசடி செய்யப்பட்டவை என்றும் அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

# குடாநாட்டின் விளைபொருள்களை கப்பல் மூலம் தெற்கே அனுப்ப ஏற்பாடு

வடமராட்சி,ஜன.5

குடாநாட்டில் உற்பத்தியாகும் விளைபொருள்களைத் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபரின் ஏற்பாட்டில் ஒரு தொகுதிப் பொருள்கள் பருத்தித்துறைத் துறைமுகத்தில் தங்கிநிற்கும் 'லிவர் பூல்' கப்பலில் ஏற்றும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களான புகையிலை, வெங்காயம் ஆகியனவே கப்பலில் ஏற்றப்படுகின்றன.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டதை அடுத்து விளைபொருள்கள் தெற்குக்கு ஏற்றுமதி செய்வது தடைப்பட்டது. இதனால் உற்பத்தியாளர்கள் நஷ்டத்தை எதிர்கொண்டனர்.

தற்போது உள்ளூர் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன. இவைபொதிசெய்யப்பட்டு லொறிகள் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துச் வரப்படுகின்றன. அங்கு கப்பலில் ஏற்றும் பணிகள் தற்சமயம் நடைபெறுகின்றன. (202)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



அல்வாய் மேற்கு, தேவரையாளி 'கந்தன்' இல்லத்தை'ச் சேர்ந்த திரு.திருமதி லிங்கேஸ்வரன் - விஜி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**தனுஷன்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (05.01.2007) அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவரை டோகாவிலுள்ள அப்பா, அம்மா, அம்மையாமார், அம்மம்மாமார், அப்பையாமார், அப்பம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், தாத்தாமார், பாட்டிமார், ஐயா, தம்பி, கோண்டாவிலுள்ள அப்பப்பாமார், அப்பம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், நீர்வேலி, மல்லாகத்தில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், உடுப்பிட்டியிலுள்ள அம்மம்மா குடும்பம், இணையாணனிலுள்ள அம்மையா குடும்பம், நீர்கொழும்பிலுள்ள பெரியமாமா, அப்பப்பா குடும்பம் ஆகியோர் தனுஷனை சகல கலைகளும் பெற்று தேவரையாளி கண்ணகை அம்மன் நரசிம்மர் கதிகாமர் அருள்வேடி பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

"கந்தன் இல்லம்"
தேவரையாளி
அல்வாய் மேற்கு.

வாழ்த்துபவர்:


## வாசகர் திருமுகம்

### பொருளாதார நெருக்கடிக்குள் யாழ். மக்கள்

யாழ்.மக்களின் பொருளாதார நிலை இன்று பெரும் பின்னடைவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. எரிகின்ற வீட்டில் பிடுங்கிய கதையாக இதுதான் தருணம் என சில வர்த்தகர்கள் பெரும் இலாபத்தை ஈட்ட முனைகின்றார்கள்.

இலாபநோக்கில் ஒரு கிலோவுக்கு 25 ரூபா, 50 ரூபா என்று வைத்து விற்கிறார்கள். கடல் உணவு வியாபாரிகளும் இவர்களை விட நாம் குறைந்தவர்கள் அல்ல என்று தாராளமாகக் கடல் உணவு வருகின்றபோதும் - மிக அதிகரித்த விலையிலேயே விற்கின்றனர். வியாபாரிகளிடம் விலை குறைத்துக் கேட்டால் பெரும் அடாவடி செய்கின்றனர். இதற்கு ஒரு நிர்ணய விலையைத் தீர்மானிக்க அரசாங்க அதிபரோ அல்து வேறு அதிகாரிகளோ இல்லையா?

மற்றும் ப.நோ. கூ. சங்கக் கடைகளில் பணம்கொடுத்து பொருள்களை வாங்கும் குடும்பங்களுக்கு குடும்ப அட்டையில் உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் ஏற்ற மாதிரி பொருள்களின் அளவை கூட்டவேண்டும். உதாரணத்திற்கு தாய், தகப்பன், 8 பிள்ளைகள் உள்ள குடும்பம் என்றால் 10 பேர்கள். ஆனால் 5 பேர்களுக்கு மட்டும்தான் அளவு சாமான்கள் மிகுதி 5 பேரும் என்ன செய்வது? அவர்களுக்கு உயிர் இல்லையா? அல்லது அவர்கள் காற்றையா குடிப்பது?

இதனை உயர் பதவியில் உள்ளவர்கள் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும். வசதி படைத்தவர்களுக்கு பிள்ளைகள் குறைவு. கஷ்டம் நிறைந்தவர்களுக்கு பிள்ளைகள் அதிகம். சம்பந்தப்பட்டவர்களுக்கு இது விளங்கும் என நம்புகின்றேன்.

மற்றும் விவசாயத்திற்குத் தேவையான கிருமிநாசினி, உரம் இல்லாததாலும் எரிபொருள் தட்டுப்பாட்டாலும் மரக்கறி விலைகளும் குறையும் அறிகுறி இல்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனை நிவர்த்தி செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*கொக்குவில் மேற்கு.* - எஸ்.எஸ்.சச்சி.

### குத்தரிசி தர நடவடிக்கை எடுப்பார்களா?

பெரும்பாலான யாழ்ப்பாண மக்களின் பிரதான உணவு குத்தரிசிச் சோறு ஆகும். ஆனால் தற்போது கப்பல் மூலம் வெள்ளை அரிசியே எடுத்துவரப்படுகின்றது. இது போர்ச்சூழலால் மன அழுத்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கும் யாழ். மக்களின் மனதை மேலும் மன அழுத்திற்கு இட்டுச்செல்கின்றது. 2000ஆம் ஆண்டிற்கு முன்னர் கப்பல் மூலம் பொருள்கள் எடுத்துவரும்போது குத்தரிசி எடுத்துவரப்பட்டது. ஆனால் ஏன் தற்போது மட்டும் குத்தரிசி எடுத்துவரப்படவில்லை?

உயர்மட்ட அதிகாரிகள் இப்பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்களா? அல்லது மௌனமாக இருக்கிறார்களா? இது தொடர்பாக கச்சேரி அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை வாசகர் திருமுகத்தினூடாக தெரியப்படுத்தவேண்டுகிறேன். அத்துடன் தேவையான நடவடிக்கைகளை எடுத்து யாழ். மக்களின் மன அழுத்தத்தை இயன்றளவு குறைக்குமாறு உரிய அதிகாரிகளிடம் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

*கோப்பாய்.* - ந.சுதன்.

* * *

தற்போது யாழ். குடாநாட்டிற்கு வழங்கப்பட்டுவரும் உலர் உணவுப் பொருள்களில் பல்வேறு குறைபாடுகள் இருப்பது கண்கூடு. இருந்தும் தவிர்க்கக்கூடியதும் தவிர்க்க முடியாதவையும் உள்ளன. அந்த வகையில் தற்போது கிடுகிடு என ஏறிவரும் விலை ஏற்றத்தினால்மீன், முட்டை, இறைச்சி, மரக்கறி இன்னோரன்ன பொருள்களும் அடக்கும்.

இதனால் மக்கள் படும்பாடு சொல்லில் வடிக்கமுடியாததை யாரும் மறுக்கவும் மறைக்கவும் முடியாது. வழங்கப்பட்டு வரும் உலர் உணவுப்பொருள்களில் முக்கியமாக அரிசி(சம்பா, வெள்ளைப் புழுங்கல்) எமது மக்களுக்கு பரீட்சயமானவை அல்ல. மாறாக இதை உண்டு அனேகர் உடல் சேர்ந்தும் நோய்வாய்ப்பட்ட நிலையே அதிகம்.

எனவே வழங்கப்பட்டு வரும் அரிசியை சிவத்தப் புழுங்கல் அரிசியாக வழங்க நடவடிக்கை எடுத்தால் மக்களுக்கு போசாக்கும் அதிகம். கஞ்சியைத் தானும் குடிக்கலாம் என நான் நம்புகிறேன்.

எனவே உரிய அரச அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா?

*சாவகச்சேரி.* - எஸ்.மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IIS COMPUTER COURSES

O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !!
பரீட்சைப் பெறுபேறு வெளிவரும் வரையான காலத்தை
IIS உடன் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்

விசேட சலுகைக் கட்டணத்தில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 | பிரிவு 4 |
|---|---|---|---|
| 05.01.2007 | 06.01.2007 | 21.01.2007 | 22.01.2007 |

**DIPLOMA COURSES :**

- Dip. in Microsoft Office
- Dip. in Internet Technology
- Dip. in Computer Programming
- Dip. in Hardware Technology
- Dip. in Desk Top Publishing
- Dip. in Eng. Drawing & AutoCAD

**CERITIFICATE COURSES :**

| | |
|---|---|
| MS Word | Flash MX |
| MS Excel | HTML |
| MS Access | Visual Basic |
| MS Power Point | Visual C |
| Adobe Photoshop | Java |
| Adobe PageMaker | Corel DRAW |

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக
கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

Institute of Informatics Studies
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. : 021 222 2831


## வாழ்த்துகின்றோம்

### துரைசிங்கம் தனுஷாந்

(யாழ்.மத்திய கல்லூரி மாணவன்)



2006 புலமைப்பரிசில் பரீட்சையில் 134 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களுக்கு எமது உள்ளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மேலும் இவர் பல உயர்வுகளைப் பெற பத்திரகாளியின் ஆசிகளை வேண்டுகின்றோம்.

80/1, பத்திரகாளி
கோயிலடி,
வண்ணார்பண்ணை. (65565)

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணாமார்கள்.


Direct Star
புத்தாண்டி[illegible] உங்கள் முதல் முதலீடு
கொம்ப்யூட்டர் கல்விக்காக இருக்கட்டும் !



O/L மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

Certificate in Information Technology
Diploma in MS Office Application
Diploma in Desktop Publishing
Diploma in Web Design
Diploma in Computerised Accounting

Education Partner
CSC Computer Education

- Diploma in Digital Pre-Press
- Diploma in Digital Video Production
- Diploma in PC Professional
- Diploma in Advanced Software Technology
- Diploma in Web Design & Development

for All Courses Duration 3 Months

ACTOS
REGISTERED WITH MINISTRY OF TERTIARY AND VOCATIONAL EDUCATION

ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் - CSC | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677 | 101,3ம் மாடி,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 8196 | கண்டி வீதி,சாவகச்சேரி. 077-3039587 | கொடிகாமம் ரோட், நெல்லியடி. 077-3122198 |



## கிராம உத்தியோகத்தர் போட்டிப்பரீட்சை வகுப்புகள்

ஆசிரியர் த.தவசேகர்
சனி, ஞாயிறு 11-2
D.M.I ஆரியகுளம் சந்தி.
திங்கள், செவ்வாய், புதன் 4-6
Subra சித்தன்கேணி.
பொதுஉளச்சார்பு, பொது அறிவு, மொழித்திறன் உள்ளடக்கிய ஏனைய பரீட்சைகளுக்கும் ஏற்றது.



தரம் 7 தொடக்கம் 11 வரையான கணித வகுப்புகள்

- பிரத்தியேக வகுப்புகள்.
- குழு வகுப்புகள்

ஆரம்பம் : 06.01.2007
By:K.Kiri
T.P : 0776997123
மணியகார ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.
(சரஸ்வதி மில் முன் ஒழுங்கை)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
26
11
1948

மறைவு
06
12
2006

### அமரர் ஞானேஸ்வரதேவி பரமேஸ்வரன்

மாசில் ஒளி முகமே! வீசு புகழ் மலரே!
காசில் நல்வழியைக் காட்டி அருள் புரிவாய்

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் 07.01.2007 (ஞாயிறு) எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து, அன்னையின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்பாக அழைக்கிறோம்

கரந்தன், நீர்வேலி. குடும்பத்தினர்.

## அறிவித்தல்

### பூர்வாங்க அளப்பனவு ஆணை

மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

**வழக்கு இல. 09/பிரிவிடல்**

மேற்படி வழக்கில் சின்னப்பு சந்திரசேகரம் உத்தரவுபெற்ற நில அளவையாளராகிய நான் மேற்படி நீதிமன்றத்தினால் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். எனவே 07.01.2007 ஆம் திகதியும் அதனைத் தொடர்ந்து வரும் நாள்களிலும் 1977ஆம் ஆண்டு [illegible] ஆம் இலக்கப் பிரிவிடற் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பின்னால் விவரிக்கப்படும் ஆதனம் என்னால் அளப்பனவு செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாயின் கோவிற்பற்று உரும்பிராய் இறை "ஆண்டான் வளவு" நிலப்பரப்பு 2 1/2, ஆட்சிப்படி 4 இதற்கு எல்லை.
கிழக்கும் வடக்கும் ஒழுங்கை
மேற்கு வேலுப்பிள்ளை பெண் முத்துப்பிள்ளைக்குரிய ஆதனம், தெற்கு செல்லையா பெண் இராசம்மாவுக்குரிய ஆதனம் இதடங்கலும்.

(65554)

க.சி.சந்திரசேகரம்,
நீதிமன்ற ஆணையாளர்.


## பாலன்ஸ் மில்ஸ்

தேங்காய் எண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய் (எள்) போன்ற (3 கிலோவிலிருந்து ஆயிரம் கிலோ வரை எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில் வடித்துக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்.

பாலன்ஸ் மில்ஸ்
மாவடிச் சந்தி - வட்டுக்கோட்டை
கஜலக்சுமி அசிரிஆலை
வட்டுக்கோட்டை
தொ.பே.: 0602212624



## பொருளியற் கல்லூரி

யாழ். இணுவில்

**கணக்கீடு**

பா.முகுந்தன் B.B.A.(HONS).F.M.(spl.)
A/L 2007 - கிரயக்கணக்கீடு
-கம்பனி முடிவுக்கணக்கு.
A/L 2008-சொத்து முடிவு செய்தல் கணக்கு
ஆரம்பம் - 06.01.2007 சனி.
குறிப்பு : நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்று அனுமதியைப் பெறவும்.


## மரண அறிவித்தல்

### கிளடிஸ் மங்களம் துரைராஜா

(A.O.G Member)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டத்தில் வசித்தவருமான கிளடிஸ் மங்களம் துரைராஜா 02.01.2007 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா துரைராஜாவின் அன்பு மனைவியும் நேசக்குமார் (Alliance Development Trust), சாந்தி சறோ (France) றெஜினா (Joe -ஆட்பதிவுத் திணைக்களம்) தேவபாலன் (கனடா), காலஞ்சென்ற ஜெபசீலன் (கனடா), செல்வதி (செல்லா- Expo Air) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.


அன்னாரின் அடக்க ஆராதனைகள் நாளை (06.01.2007) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9124 (65569)

தகவல்:
நேசக்குமார்
(மகன்).

## 31ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
### பொன்னையா கந்தையா (கனகையா)



தோற்றம் 19.04.1924 மறைவு 07.12.2006

கடந்த 7.12.2006 வியாழக்கிழமை சிவபதமடைந்த அமரர் பொன்னையா கந்தையா அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (06.01.2007) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மார்க்கம்புரை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (65012)

குடும்பத்தினர்,
க.சற்குணலிங்கம்,
பிரதேச செயலகம், கோப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் வா.மனோசனின்
அன்புத் தந்தை

**அமரர் செல்லையா வாமதேவன்**

(உரிமையாளர், சிற்றிகணன் காமன்ஸ், சுன்னாகம்)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.

தரம் 11 மாணவர்கள்,
ஆசிரியர்கள், இயக்குநர்,
பிறைற் கல்வி நிலையம்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

# அமரர் தம்பையா குமாரசாமி

(ஸ்தாபகர், த.குமாரசாமி றெக்ஸ்ரைல்ஸ், த.குமாரசாமி அன் சன்ஸ், சௌபாக்கியாஸ் றெக்ஸ்ரைல்ஸ்,)
T.K.S றெக்ஸ் கொழும்பு, T.K.ருறிஸ்ட் இன். )

அன்னை மடியில் 04.01.1934

ஆண்டவன் அடியில் 07.12.2006

காரைநகர் பலுக்காட்டைப் பிறப்பிடமாகவும் இல, 352, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் தற்பொழுது பொஸ்வல் பிளேஸ் வெள்ளவத்தையில் வசித்தவருமான எமது குடும்பத்தலைவர் அமரர் தம்பையா குமாரசாமி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தந்தி மூலமும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கெள்கின்றோம். அத்துடன் இன்று (05.01.2007) வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை(06.01.2007) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

11A, பொஸ்வல் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06
தொலைபேசி : 2501185, 2360659 (63375)

அன்னாரின் மறைவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# உண்மையை மூடி மறைக்க உப்புச்சப்பற்ற வாதங்கள்

மன்னார், இலுப்பைக்கடவைக்கு அண்மையில், படகுத் துறைக் குடியிருப்பு மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுக் குறித்து இலங்கை அரசின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கை, தமிழர் தரப்பை பெரும் விசனத்துக் குள்ளும், எரிச்சலுக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.

'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தமை போல' இந்த அறிக்கை வந்திருக்கின்றது. கண்மூடித்தனமான - கொடூர - மிலேச்சத்தனமான - விமானக் குண்டு வீச்சில் அப்பாவித் தமிழ் மக்கள் கொன் றொழிக்கப்பட்ட துயரத்தில் துவண்டிருக்கும் ஈழத் தமிழினத்தை மேலும் வேதனைக்குள் ஆழ்த்தும் வகையில் இந்த அறிக்கை வெளியாகி யிருக்கின்றது.

அங்கு புலிகளின் கடற்படைத் தளம் மீதே தாக்குதல் நடத்தப் பட்டதாக அடித்துக் கூறும் அரசு, அத்தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் சின்னாபின்னமாகி உயிரிழந்தமை புலிகளின் உண்மைக்குப் புறம்பான பிரசாரம் என்று கதை விட்டு, சர்வதேச சமூகத்தைத் தவறாக வழிநடத்த முயல்கிறது.

குண்டு வீச்சு இடத்தை நேரில் பார்வையிட்ட மன்னார் மறை மாவட்ட ஆயரும், அப்பகுதி பங்குத் தந்தையும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் உண்மையை அம்பலப்படுத்திய பின்னரும் இவ்வாறு அரசுத் தரப்பு 'கயிறு திரிக்க' முயற்சிப்பது அபத்தமானது.

ஐ.நா. அமைப்புகள் உட்பட முழு சர்வதேச சமூகத்துக்கும் மன்னார், இலுப்பைக்கடவைக் குண்டு வீச்சும், அதன் இலக்கும், பாதிப் புகளும் பற்றிய முழு உண்மையும் தெரியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இத்தகைய மோதல் மற்றும் யுத்த விவகாரங்களில் அரசுத் தரப்பின் அறிவிப்புகள், அறிக்கைகள், தகவல்கள் போன்றவற்றின் நம்பகத் தன்மை எத்தகையது என்பதைச் சர்வதேச சமூகம் மதிப்பீடு செய்வதற்கு, இலுப்பைக்கடவை விமானக் குண்டு வீச்சுத் தொடர்பாக அரசுத் தரப்பு தற்போது விடுத்து வரும் அறிவிப்புகள் நல்ல உதாரணங்கள். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல இலுப்பைக்கடவை விமானக் குண்டு வீச்சின் பின்னர், உண்மையை மூடிமறைத்து அமுக்கி, பொய்யைக் கயிறாகத் திரித்து விடுக்கப்படும் அறிக்கைகள், தரப்புகளின் நேர்மைத் தன்மை குறித்து மதிப்பாய்வு செய்ய நல்ல வாய்ப்பைத் தந்துள்ளன.

மெய்மையை மூடி மறைக்கும் தமது விதண்டாவாதத்துக்கு, மேற்படிக் குண்டு வீச்சில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்ட வைத்தியசாலைகள், சம்பவ இடத்திலிருந்து அவற்றின் தூரங்கள் ஆகியவற்றை எல்லாம் துணைக்கு எடுத்திருக்கிறது அரசுத் தரப்பு

மேற்படிக் குண்டு வீச்சில் காயமுற்றவர்கள் சிவிலியன்கள் - பொது மக்கள் - என்றால், சம்பவ இடத்துக்குக் கிட்டவாகவுள்ளவையும், வசதியானவையுமான மன்னார் மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு அவர்களை எடுத்துச் செல்லாமல் தொலைவில் இருக்கும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதேன் என்று கேள்வி எழுப்பி, ஆகவே அக்குண்டு வீச்சில் காயமுற்றோர் புலிகள் தான் என்று வாதிட முயல்கிறது அரசு.

அரசு குறிப்பிடும் இந்த இரண்டு வைத்தியசாலைகளும் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளவை. குண்டு வீச்சு இடம்பெற்றதோ புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில்.

அக்குண்டு வீச்சில் உடல் அவயவங்களை இழந்து, படுகாயமுற்று, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் மக்களை ஒரு கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் இருந்து மறு கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு - அதுவும் அம்புலன்ஸில் - விரைந்து எடுத்துச் செல்வதில் நேரக்கூடிய நெருக்கடியும், சுட்டுப்பாடும், காலதாமதமும் எல்லோருக்கும் தெரிந்தவைதான்.

வாகரையில் அரச படைகளின் ஷெல், பீரங்கிக் கொடூரங்களில் காயமுற்ற சிவிலியன்களை அரச கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்வதில் நேர்ந்த அனுபவம் ஒவ்வொருவருக்கும் தெரிந்ததே.

அதுமட்டுமல்ல. செஞ்சோலை மீதான விமானக் குண்டு வீச்சில் படுகாயமுற்ற பாடசாலை மாணவிகள் இருவர் மேலதிக சிகிச்சைக்காக அரச கட்டுப்பாட்டுப் பிரதேச வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டபோது - செஞ்சோலை மீதான குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோர் மற்றும் காயமுற்றோர் புலிகளே என்ற தனது வாதத்தை நியாயப்படுத்தும் நோக்கோடு - அந்த மாணவியரை அரசுப் பாதுகாப்புப் பிரிவு, வைத்தியசாலையில் வைத்துக் கைது செய்து, தடுப்புக் காவலுக்கு உட்படுத்தி, தடுத்து வைத்திருக்கின்ற அனுபவம் தமிழர்களுக்கு உண்டு.

அத்தகைய பின்னணியில் -

இப்போது இலுப்பைக்கடவை விமானக் குண்டு வீச்சு கடற்புலிகளின் தளம் மீதே நடத்தப்பட்டது, அதில் புலிகளே உயிரிழந்தனர், காயப்பட்டனர் என்று அரசுத் தரப்பு பெரும் பிரசாரத்தை முன்னெடுத்து, அதை உடும்புப் பிடியாகக் கூறிவரும் நிலையில் -

இக்குண்டு வீச்சில் படுகாயமுற்றோரை அரச படைகளின் முன்னரங்க நிலைகளைத் தாண்டி விரைந்து அங்குள்ள வைத்தியசாலை களுக்குக் கொண்டு செல்வதில் சிக்கல் நிலவும் சூழலில் -

அவர்களை அரச கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்ல ஏன் முயற்சிக்கவில்லை என்று கேட்பது அர்த்தமற்றது; அபத்தமானது.

மேலும் இது தொடர்பான அரசின் அறிக்கையிலிருந்து புதிய விவகாரம் ஒன்றும் அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

இதுவரை அரசுப் படைகளின் ஆக்கிரமிப்பில் உள்ள தமிழர் தாயகப் பகுதியில்தான் பெருமளவு பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினரால் கபளீகரம் செய்யப்பட்டு, அப்பிரதேச மக்களின் நடமாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது என மக்கள் நினைத்து வந்தனர்.

ஆனால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் பல பிரதேசங்களை மக்கள் நடமாடக் கூடாதவை என்று அரசு பிரகடனப்படுத்தித் தடை விதித்திருக்கிறது என்ற விடயம் இப்போது வெளியாகியிருக்கின்றது.

*''விமானத் தாக்குதல் நடந்த பகுதியில் சிவிலியன்களின் நடமாட்டத்துக்குப் படையினர் முன்கூட்டியே தடை விதித்திருக்கின்றார்கள். எனவே, அங்கு சிவிலியன்கள் நடமாட்டமும் இருந்திருக்காது. அவர்கள் மரணமடைந்திருக்கவும் முடியாது''* - என்று அரசுத் தரப்பு தனது அறிக்கையில் கூறியிருப்பது அதிர்ச்சி தரும் தகவல்.

இந்த உப்புச் சப்பற்ற வாதங்கள் உண்மையை மூடி மறைத்துவிடா என்பதுதான் உண்மை.

# இரண்டாயிரம் தபால் பொதிகள் யாழ். தபாலகத்துக்கு வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜன.5

குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்காக திருகோணமலைத் தபாலகத்தில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகளில் ஒரு தொகுதி யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இந்தத் தொகுதியில் 2 ஆயிரத்து 317 தபால் பொதிகள் அடங்கியுள்ளதாக யாழ். தபாலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பொதிகள் முழுமையாக இறக்கப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை யாழ். தபாலகத்துக்குக் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைத் தரம் பிரிக்கும் பணிகள் நடைபெறுவதாகவும் பொதிகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படும் எனவும் தபாலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (1-8)

## வகுப்பு தொழிலாளரை அமைச்சர் சந்திக்கிறார்

யாழ்ப்பாணம்,ஜன.5

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகளை கடந்த வாரம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்த நிலையில் சாவகச்சேரி வகுப்புத் தொழிலாளர்கள் விடுத்துள்ள கோரிக்கைகளுக்கு இணங்க நாளை சாவகச்சேரி வகுப்புத் தொழிலாளர்களைச் சந்திக்கவுள்ளார்.

குடா நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் வகுப்புத் தொழிலாளர்கள் முகங்கொடுத்து வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதும், அதற்குரிய தீர்வுகளை எட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இச்சந்திப்பின் முக்கிய நோக்கமாக அமையும் - என்று அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

## குடாநாட்டில் முத்திரைக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாணத்தில் முத்திரைகளுக்குப் பொரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக குடாநாட்டு மக்களின் தபாற் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தபால் நிலையங்களில் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. 100 ரூபா முத்திரைகள் மட்டுமே குறைந்தளவு கையிருப்பில் உள்ளன. ஏனைய முத்திரைகள் முற்றாகவே இல்லை. இதனால் தபால் சேவைகளில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

முத்திரைகளை விமானம் மூலம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். தபாலக அதிகாரிகள் கொழும்பில் தபால் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதும், விமான வழி தபால் சேவையில் சீரின்மை உள்ளதாலும் மற்றும் பாதுகாப்பற்ற நிலை காணப்படுவதாலும் முத்திரைகளை விமானம் மூலம் அனுப்பி வைக்க முடியாதுள்ளதாக அவர்கள் தெரிவித்ததாக அறிய வருகிறது. (8)

## நாயன்மார்கட்டில் ஒருவர் கடத்தல்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாணம், நாயன்மார்க் கட்டுப் பகுதியியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் ஆயுத முனையில் கடத்திச் செல்லப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செம்மணி வீதியைச் சேர்ந்த துரைசிங்கம் பாபுராஜ் (வயது - 24) என்ற இளைஞரே கடத்தப்பட்டதாக அவரது பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் இந்த இளைஞர் தனது வீட்டில் உறக்கத்தில் இருந்தவேளை ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டாரைப் பயமுறுத்தி விட்டு இளைஞரைக் கடத்திச் சென்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர் யாழ். தபாலகத்தில் தற்காலிக ஊழியராகக் கடமையாற்றி வருகின்றார் எனவும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (1-8)

**நாளை**

மார்கழி - 22
சனிக்கிழமை
06.01.2007
திதி : திருதியை
முன்னிரவு 9.24
நட்சத்திரம் : ஆயிலியம்
பின்னிரவு 1.24
சுபநேரம் : 03.31 - 05.01
இராகுகாலம் : [illegible]

## சண்டிலிப்பாயில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ். பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவத் துறையினரின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இலவச சிக்குன்குனியா மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் காய்ச்சல், உடல்வலி, மூட்டுநோ போன்ற நோய்களுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்படவுள்ளதாக சித்த மருத்துவத்துறையினர் தெரிவித்தனர். (1-202-75)

# மிதிவெடிகளால் காயமடையும் நிகழ்வுகள் குறைகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.5

கடந்த வருடம் (2006) யாழ். குடாநாட்டில் ஒன்பது பேர் மிதிவெடிகளால் கயமடைந்துள்ளதாக மாவட்ட மிதி வெடி செயற்பாட்டுப் பிரிவின் தரவுகளை மேற்கோள்காட்டி மாவட்ட மிதி வெடி செயற்பாட்டுப் பிரிவின் அதிகாரி எல்மோ. ஆனந்தராஜா தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டில் இருவர் மரணமடைந்து, 21 பேர் காயமடைந்துள்ளதுடன் 2004ஆம் ஆண்டில் ஒருவர் மரணமடைந்து 18 பேர் காயமடைந்துள்ளனர். இத்தரவுகளின் அடிப்படையில் கடந்த வருடம் மிதி வெடிகளினால் ஏற்பட்ட பாதிப்பு வெகுவாகக் குறைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதேவேளை குடாநாட்டில் மிதி வெடி அகற்றும் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் தொண்டர் நிறுவனங்கள் 60 வீதமான செயற்பாடுகளை நிறைவு செய்துள்ளன எனவும், தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தீவகம், தென்மராட்சி கிழக்கு, மற்றும் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மிதி வெடி அகற்றும் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனந்தராசா மேலும் தெரிவித்தார். (ப-வ)

# இரவு நேரம் வீடு புகுந்து வாள்வெட்டு நான்கு சகோதரர்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜன.5

கொடிகாமம் வேவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் வீடு ஒன்றுக்குள் புகுந்த கோஷ்டி ஒன்று அங்கு இருந்தவர்கள் மீது வாள் வெட்டு நடத்தியுள்ளது.

அந்தச் சம்பவத்தில் நான்கு சகோதரர்கள் காயம் அடைந்துள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த சகோதரர்களான சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (வயது 33), சின்னத்தம்பி இலங்கேஸ்வரன் (வயது 26), சின்னத்தம்பி இராமேஸ்வரன் (வயது 25), சின்னத்தம்பி கருணாகரன் (வயது 17) ஆகிய நால்வருமே படுகாயமடைந்தவர்களாவர்.

சாவகச்சேரி ஆஸ்ப்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக நேற்று அதிகாலை 2 மணியளவில் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (1-78)

# சதாம் தூக்கிலிடப்பட்டமையைக் கண்டித்து கிழக்கு முஸ்லிம் பகுதிகளில் இன்று ஹர்த்தால்

## கொழும்பில் ஆர்ப்பாட்டப்பேரணிக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன. 05

ஈராக்கின் முன்னாள் ஜனாபதிபதி சதாம் ஹுஸைன் தூக்கிலிடப்பட்டமையைக் கண்டித்து கிழக்கில் முஸ்லிம்கள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் இன்று பூரண ஹர்த்தால், கடையடைப்புக்கும் நிர்வாக முடக்கலுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு உட்பட முஸ்லிம்கள் வாழும் ஏனைய பகுதிகளில் ஜும்ஆத் தொழுகையை அடுத்து ஜனாஸாத் தொழுகை நடத்தவும் அதன்பின்னர் ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் பூரண நிர்வாக முடக்கலுக்கும் ஹர்த்தால் நடவடிக்கைக்கும் அனைவரும் ஒத்துழைக்கக் கோரி நேற்றுமுன்தினம் பல சமூக அமைப்புகள் அப்பிரதேசங்களில் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன.

அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களிலும் ஹர்த்தால், கடையடைப்புக்கும் ஆர்பாட்டத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று ஜும்ஆத் தொழுகையை அடுத்து மருதானை பள்ளிவாசலில் ஜனாஸாத் தொழுகை நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து அப்பள்ளிவாசலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டமும் அங்கிருந்து அமெரிக்கத் தூதரகம்வரை பேரணியும் நடைபெறவுள்ளது. அமெரிக்கத் தூதரகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தை 15 இற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. கடைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றை மூடி வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு இன்றைய தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் ஏற்பாட்டாளர்கள் கொழும்பு வாழ் மக்களைக் கேட்டுள்ளனர். (த-07)

## பத்திரிகையாளர் சங்க கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,ஜன.5

வட இலங்கை பத்திரிகையாளர் சங்க மாதாந்த நிர்வாகசபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கத் தலைவர் சி. கதிர்காமத்தம்பி தலைமையில் சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-203)

## இருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ். குடாநாட்டில் இரு வேறு சம்பவங்களில் இரு இளைஞர்களை காணவில்லை என உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் வசந்தன் (வயது 35) என்பவரை கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமையன்று வீட்டுக்குச் சென்ற வெள்ளை வான் கும்பல் உறவினரை அச்சுறுத்திவிட்டு கடத்திச் சென்றுள்ளதாக உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்புத்துறை 4ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த நடராஜா சிவதாசன் (வயது 36) என்பவர் கடந்த மாதம் 3ஆம் திகதியன்று வீட்டிலிருந்து புறப்பட்டவர் இதுவரை வீடு திரும்பவில்லை என உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணையகத்தில் முறையிடப்பட்டுள்ளது. (1-79)

## கப்பலில் மேலும் இரு பவுஸர்கள்

அரியாலை,ஜன.5

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பு களஞ்சியத்திற்கு மேலும் இரண்டு பவுசர்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

குடாநாட்டு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு எரிபொருள்களை சீராக விநியோகிக்கும் பொருட்டே இந்த பவுசர்கள் எடுத்துவரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே ஒரு பவுசர் வாகனம் கப்பலில் எடுத்து வரப்பட்டது் குறிப்பிடத்தக்கது. (1-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கரையோரப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அச்சத்தின் காரணமாக முற்றாக இடம்பெயர்வு

மன்னார், ஜன. 05

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கரையோரப் பிரதேச மக்கள் விமானத் தாக்குதல் அச்சம் காரணமாக அப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார், இலுப்பைக்கடவை படகுத்துறைக் கிராமத்தின் மீது சிறிலங்கா விமானப் படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய கண்மூடித்தனமான விமானத் தாக்குதலில் சுமார் 17 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இப்பகுதி மக்கள் விமானத் தாக்குதல்கள் தொடரலாம் என்ற அச்சத்தால் இடம்பெயரத் தொடங்கியிருக்கின்றனர்.

முற்றுமுழுதாக கடற்றொழிலாளர்களையே கொண்டுள்ள இந்தக் கிராமத்தின் மீதான தாக்குதலின் பின்னர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டி லுள்ள கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டிருக்கின்றது.

முசலிப் பகுதியிலிருந்து சேர்ந்த 63 குடும்பங்களைச் சேர்ந்த 269 பேர் இடம்பெயர்ந்து நானாட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பொந்தியூகண்டல் என்ற பகுதிக்குச் சென்றுள்ளனர். அங்கு உறவினர்கள் மற்றும் நண்பர்களின் இல்லங்களில் தங்கியிருப்பவர்கள் தவிர ஏனையவர்கள் பாடசாலைகளில் தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கான சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்ற அதே வேளையில், உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நானாட்டான் பகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கின்ற போதிலும் அப்பகுதியிலும் விமானத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது. (த-12)

## வதிரி மேற்கில் குடும்பஸ்தர் மீது சூடு

யாழ்ப்பாணம், ஜன.5

வதிரி மேற்கில் நேற்று வியாழக்கிழமை மாலை 8 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த திரவியம் சற்குணம் (வயது 29) என்னும் 2 பிள்ளைகளின் தந்தையே சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தவராவார்.

இவர் வீட்டில் இருந்த வேளையில் இனந்தெரியாத துப்பாக்கி தாரிகள் அவரை வீட்டிற்கு வெளியில் அழைத்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கழுத்தில் காயமடைந்த இவர் ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (1-15-155-173)

## புலிகளின் தவறான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகள் மீதே விமானங்கள் தாக்குதல் நடத்தின என்பதைத் தாம் இப்போதும் உறுதியாக மறுக்கிறார் எனத் தெரிவித்திருக்கும் அமைச்சர் ரம்புக்வெல -

இதுதொடர்பாகமேலும்தெரிவித்ததாவது:-

''விடுதலைப் புலிகள் தம்மைத் தவறாக வழிநடத்துவதை அனைத்துலக சமூகமும், மதத் தலைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். நாங்கள் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். ஆனால், விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்துள்ளனர். மன்னாரில் குண்டு வீச்சு நடைபெறப் போவதை அறிந்த பின்னர் அனைத்துலக சமூகத்தின் அனுதாபத்தைப் பெறுவதற்கு அந்த இடத்திற்குப் பொது மக்களை விடுதலைப் புலிகள் இழுத்து வந்திருக்கலாம்.

இலுப்பைக்கடவை பொதுமக்கள்வசிப்பதற்குத் தடைசெய்யப்பட்ட பிரதேசம். நாம் விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளத்திற்குத் தான் குண்டுகளை வீசினோம். விடுதலைப்புலிகள்தவறானதகவல்களைத் தருகின்றனர்.

காயமடைந்தவர்களை இலுப்பைக்கடவையிலிருந்து 112 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அநுராதபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாமல் 140 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றமை சந்தேகத்தைத் தருகின்றது'' என்றார் அவர். (த)

## சம்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் திட்டங்களில் ஒன்றாக இந்த அனல் மின் திட்டம் அமைந்துள்ளது என்றும் திருமலையில் புதிய இறங்குதுறை ஒன்றையும், சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றையும் அமைப்பதற்கான திட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளார் என்றும் அமைச்சர் ஜோன் செனவிரட்ண தூதுவரிடம் கூறினார் என அமைச்சரவை வட்டாரம் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தது.

திருகோணமலை மாவட்டத்தில் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்தியா உடன்படுகிறது. திருகோணமலையில் எந்த இடத்தில் இதை முன்னெடுப்பது என்பதில் இந்தியாவுக்குப் பிரச்சினையில்லை. அந்த இடத்தைத் தீர்மானிப்பது இலங்கைதான். அதன்படி சம்பூர் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சரவை வட்டாரம் மேலும் தெரிவித்தது. (த)

## வவுனியாவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் தெரிவித்தனர். இத்தாக்குதலில் போது படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும், இதன் பின்னர் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவருடைய சடலத்தையும், ரி- 56 ரகத் துப்பாக்கி ஒன்றையும் தாம் மீட்டுள்ளனர் எனவும் படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார், இலுப்பைக்கடவையில், படகுத்துறையில் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சின் அனர்த்தங்கள் இந்த விவாதத்தில் முக்கிய இடம் பிடிக்கும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 9 ஆம் திகதி நடைபெறும்

அன்றைய தினம் அவசரகாலச்சட்டம் மீதான விவாதம் நடைபெறும். அடுத்த நாள் புதன்கிழமை வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்களின் அவலநிலை குறித்த விசேட விவாதம் நடைபெறும்.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் உதயனுக்கு இது குறித்து மேலும் தெரிவிக்கையில்:-

மன்னார் விமானத்தாக்குதல் உட்பட தமிழ் மக்கள் எதிர்கொண்டுவரும் பல பிரச்சினைகள் குறித்து வியாழனன்று பிற்பகல் நாம் கலந்தாலோசித்தோம். இவ் விடயத்தில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து இறுதித் தீர்மானம் எதையும் நாம் எடுக்கவில்லை.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகமானோர் வெளிநாடுகளில் உள்ளனர். அவர்கள் அனைவரையும் ஏழாம் திகதிக்கு முன்னர் கொழும்புக்கு வரவழைப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறோம்.

ஏழாம் திகதி அல்லது எட்டாம் திகதி அனைவரும் ஒன்றுகூடி இதுபற்றி நாம் இறுதி முடிவெடுப்போம். இதேவேளை, மன்னார் தாக்குதல் சம்பவம் பற்றியும் வடக்கு - கிழக்கில் தமிழர்கள் எதிர்கொள்ளும் அவதி பற்றியும் நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் ஒன்றை நடத்த சபாநாயகரிடம் அனுமதி கேட்டோம்.

இம்மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுகிறது. அன்றைய தினம் அவசர காலச் சட்டம் மீதான விவாதமும் நடைபெறவுள்ளதால் 10 ஆம் திகதி எமது விவாதத்திற்கான அனுமதியை சபாநாயகர் வழங்கியுள்ளார் - என்றார். (அ-க)

## சட்டக் கல்லூரி அனுமதி:

# ஏழு தமிழ் மாணவர்கள் நியாயம் கோரி வழக்கு

இலங்கைசட்டக்கல்லூரிக்கு அனுமதி மறுக்கப்பட்ட பத்துத் தமிழ் மாணவர்கள் அதை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் 71 புள்ளிவரை பெற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 60 முதல் 69 வரை புள்ளி பெற்ற பத்துத் தமிழ் மாணவர்களே வெட்டுப்புள்ளி பற்றிய முடிவு தவறானது எனக்குறிப்பிட்டு, தங்களுக்கு நீதி வழங்கக்கோரி இப்போது வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

நாளை மறுதினம் சட்டக் கல்லூரியில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான பதிவுகள் இடம்பெறவிருக்கின்றன. அதை இடைநிறுத்துமாறு உத்தரவிடும்படியும் மேற்படி பத்து மாணவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாங்கள் தாக்கல் செய்துள்ள மனுக்களில் கோரியுள்ளனர்.

சட்டக் கல்லூரி அதிபர், பதிவாளர், சட்டக் கல்லூரி ஆணைக்குழு, சட்டமா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர் உட்பட ஏழு பேர் இந்த மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேபோன்று அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் மனுச் செய்த ஏழு தமிழ் மாணவர்களுக்கு அனுமதி வழங்கும்படி ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருப்பதும் -

அந்த உத்தரவை ஆட்சேபித்து சட்டமா அதிபர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட ஒரு நீதியரசரைக்கொண்ட உயர் நீதிமன்றின் விடுமுறைக் கால ஆயம், மேற்படி மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவை இடைநிறுத்தி இடைக் காலத் தடை உத்தரவு விதித்திருப்பதும் - குறிப்பிடத்தக்கவை.

(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

## தமிழகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியா சென்றிருந்த போது மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு இணங்க இப்பொருள்களை இலங்கை அரசாங்கம் இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்- என்றுள்ளது.

## சு.க.-ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்துள்ளது.

ஒரு மாதகாலத்துக்கு மேலாகியும் ஸ்ரீல. சு.கட்சி இதற்கென ஒரு பிரதிநிதியை நியமிக்கவில்லையென ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலை தோன்றியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி விசனம் தெரிவித்திருக்கிறது. (த)

## வெளிவிவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருமான கோட்டபாய ராஜபக்ஷ வரம்பு மீறி தலையிடு செய்கிறார் என்ற அமைச்சர் மங்களவின் சீற்றம் போன்ற காரணங்களினால் ஜனாதிபதிக்கும், மங்கள சமரவீரவுக்கும் இடையிலான முறுகல் முற்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அமைச்சர் மங்களவின் கீழ் துறைமுக அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த சில அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் அவருக்குத் தெரியாமலேயே அண்மையில் ஜனாதிபதியால் பிடுங்கப்பட்டு வேறு ஒரு அமைச்சுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இந்தப் பின்னணி லேயே வெளிவிவகார அமைச்சுப் பதவ யைப் பொறுப்பேற்க முடியுமா என்பதை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் ஜனாதிபதி நேரடியாகவே கேட்டறிந்தார் என்றும் கூறப்படுகின்றது.

அதற்குத் திட்டவட்டமான பதிலேதும் தெரிவிக்காத அமைச்சர் சில்வா, தாம் தற்போது தம்வசம் இருக்கும் அமைச்சுப் பதவியிலேயே தொடர விரும்புகின்றார் என்று ஜனாதிபதிக்குப் பதிலளித்தார் என்று கூறப்பட்டது. (உ)

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை - அலம்பிலில் 6 ஆம் கட்டையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கி கிபீர் விமானங்கள் தாக்குதலை நடத்தின என்றும்-

இத்தாக்குதலில் 7 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

மரியநாயகம் நேசமணி (வயது-61), முத்துராசா மோசீஸ் (வயது-09) ஆகியோர் படுயாமடைந்த நிலையில் முல்லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

A/L 2007, 2008
அகை ரீதியான மீட்டல்
பொருளியல்
G.பிரதீபன் (B.BA)
ஆரம்பம்:
06.01.2007 நாளை
பி.ப 2 மணி
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்நகர்.
A/L 2009 மிக விரைவில்....

COLLEGE OF ENGLISH
பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்.
மூன்றே மாதத்தில் ஆங்கிலம் பேச எழுத வாசிக்க அடிப்படையில் இருந்து
SPOKEN ENGLISH/ GRAMMAR
ஆரம்பம் : 07.01.2007
ஞாயிறு
விரும்பிய நேர அட்டவணையினை அலுவலகத்தில் பெறவும்.

A/L 2009
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 06.01.2007
Sat. 8a.m.
Acc.-பாலகஜன்
Eco.-எம்.விக்கி
B.st.-யசோ
BEACON யாழ்நகர்
PROPRIETOR: POOPALASINGAM

DCM
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2009
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் : 06.01.2007
சனி காலை 9 மணி
எமது வழமையான ஆசிரியர் குழு
இயக்குநர்
வரதராஜன்.

பிறைற்றின் கல்வி நிலையம்
சாவகச்சேரி.
தரம் 5 புலமைப் பரிசில் வகுப்புகள் நடைபெறுகின்றன.
ஆசிரியர்:
S. கபிலன்.
V. சசிக்குமார்.
புதிய பிரிவு ஆரம்பம்
06.01.2007

SPOKEN ENGLISH WITH GRAMMAR
ஆரம்பம் : 07.01.2007
ஞாயிறு மு.ப 10 மணி
By: BRITTO
அனுமதிகள் அலுவலகத்தில்
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்)

அரசாங்க ஊழியர்களுக்கும், A/L கற்கும் மாணவர்களுக்குமான
விசேட சிங்கள வகுப்பு
ஆரம்பம் : 05.01.2007 (இன்று)
மாலை 4 மணி
By: குமரன் MA.MEd
நேர அட்டவணை வகுப்பில் தீர்மானிக்கப்படும்.
நாவலர் இன்ஸ்ரியூட்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

அரசியல்
MODEL EXAM
பழக்கட்டு : 1
07.01.2007
பொருளியல் கல்லூரி இணுவில்.
ஐடியல் அக்கடமி சண்டிலிப்பாய்.
BARATHY சித்தன்கேணி.
ஐடியல் அக்கடமி நீராவியடி, யாழ்.
A/L 2008
ஒப்பீட்டு அரசியல்
By: K.SUGASH

## பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

பத்திரிகை விநியோகம் செய்வதற்கு விநியோகஸ்தர்கள் தேவை. மோட்டார் சைக்கிள் மற்றும் கார் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள் அத்தாட்சிப் பத்திரங்களுடன் அலுவலக நேரத்தில் உதயன் முகாமையாளரைச் சந்திக்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org